TNED140052212022

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, பவானி.**
**முன்னிலை – திரு. J.ராஜ்குமார், B.A., LL.B.,**
**நீதித்துறை நடுவர் எண்.1, பவானி.**
2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29ம் நாள் புதன்கிழமை
**பல்வகை மனு எண்.02/2025**
**அதன்**
**சுருக்குமுறை விசாரணை வழக்கு எண். 703/2022**

திருமதி. சந்திரா
க.பெ.தங்கவேல் ... மனுதாரர்/எதிரி

**/எதிர்/**

காவல் உதவி ஆய்வாளர்,
பவானி காவல் நிலையம்,
பவானி
குற்ற எண்.120/2022 ... எதிர்மனுதாரர்/புகார்தாரர்.

இம்மனுவானது கடந்த 24.09.2025ம் தேதியில், இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரையில் விசாரணையில் இருந்து, எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும், மனுதாரர்/எதிரி தரப்பில் மனுதாரர்/எதிரியே ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

மனுவானது கு.வி.மு.ச பிரிவு 254(2) ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர் வழக்கின் சுருக்கம்–**

காவல் துறை தனது புகார் மனு CMPNO:9869/13 வழக்கில் குற்றவாளிகளை தப்புவித்துள்ளார்கள். புருசோத்தம்மன் கொடுத்த உண்மை வாக்குமூலத்தை 25/11/13ல் CSRNO:147/13ல் மறைத்துள்ளதாகவும், மேலும், திரு.குமரேசன் வழக்கறிஞர்



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.10.29 15:22:38 +0530

சட்டக்கருத்துரை வழங்கியதாக வழக்கை முடித்துள்ளனர் என்றும், திரு. குமரேசன் முன்னால் அரசு வழக்கறிஞர் பவானி காவல் துறைக்கு சட்டக்கருத்துரை வழங்கவில்லை என்றும் கவுந்தப்பாடி காவல் நிலையத்திற்கு சட்டக்கருத்துரை வழங்கியதாக பார் கவுன்சிலுக்கு தனது புகார் மனு எண்: 150/24ல் தெரிவித்துள்ளார் என்றும், காவல்துறை CMP NO:10510/13ல் விசாரணை செய்யாமல் குற்றவாளிகளை தப்புவிக்க அறிக்கை சமர்ப்பித்துள்ளனர் என்றும், OS NO:147/13, IA NO:557/13, IA NO:1452/13, IA NO:1453/13 வழக்கில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பவானி திரு. குழந்தைவேல் உண்மையை மறைத்து பொய்யை சொல்லி போலி ஆவணங்கள் 2013ல் தயார் செய்து நீதிமன்றத்தை திசை திருப்பி உத்திரவு 04/12/13 மற்றும் 30/04/14 இல் பெற்றுள்ளார் என்றும், திரு. குழந்தைவேல் 340 Cr.PC மற்றும் இதர பிரிவுகளின் கீழ் தண்டிக்கப்படவேண்டியவர் என்றும், சென்னை உயர்நீதிமன்றத்தில் CRLOP NO:6002/2015 வழக்கில் நீதிமன்றம் 12/03/2015ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட போதிலும் திரு.விஜயகுமார் பதில் அறிக்கை தாக்கல் செய்யாமல் இருந்துள்ளதாகவும், மேலும் உண்மையான வாக்குமூலத்தை மறைக்க உடந்தையாக இருந்துள்ளதாகவும், சென்னை உயர்நீதிமன்றத்தில் திரு. சத்தீஸ் காவல் துறை ஆய்வாளர், ஊழல் தடுப்புத்துறை, கடலூர் அவர்கள் CRLOP NO:6002/2015 வழக்கில் எதிர்வாதம் எந்தவித ஆவணங்கள் இல்லாமல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

1.2 மேலும், தனது புகார் மனு 23/12/21 உடன் இருபத்தியொரு ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்ட பிறகு 07/03/22 தேதியில் சட்டக்கருத்துரை பெற நூற்றி ஐந்து பக்கங்கள் சமரப்பிக்கப்பட்டு இருபது பக்கங்கள் கொண்ட மனு மற்றும் ஆவணங்கள் 21/03/22 அன்று மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், ஈரோடு அவர்களிடம் சமர்பிக்கப்பட்டும், திரு. இரகுநாதன், முன்னால் காவல் துறை உதவி ஆய்வாளர், பவானி குற்றவாளிகள் தப்புவிக்க காரணமாக இருந்துள்ளார் என்றும், திரு ஈஸ்வரன் குற்றவியல் நீதிமன்றம் எண்.1 பவானி முன்னால் ஊழியர் குற்றவாளிகள் தப்புவிக்க காரணமாகவும் தன் மீது பொய் வழக்கு தாக்கல் செய்ய காரணமாகவும் நீதிமன்றம் BAIL வழங்கியும் நான்கு நாட்கள் நீதிமன்ற Custodyல் வைக்க காரணமாக இருந்துள்ளதாகவும், திருமதி விஜயலட்சுமி, சார்பு நீதிமன்ற நீதிபதி அவர்கள் உத்தரவு பிறப்பித்தபடி நீதிமன்ற கோப்புகள் சரி செய்துள்ளார்



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2025.10.29 15:22:43 +0530

என்றும், மேலும் நீதிமன்ற உத்தரவு படி CMPNO:9869/13, CMP No:10510/13 மற்றும் CMP NO:5476/22 வழக்கில் விரைவான நடவடிக்கை எடுக்காமல் இருந்துள்ளார் என்றும், திருமதி. ஸ்ரீப்ரியா வழக்கறிஞர் தனது வக்காலத்து WPNO:33144/15 மற்றும் CRLOP.NO 6002/2015 வழக்கில் வழக்கு தாக்கல் செய்யாமல் வழக்கு தள்ளுபடி செய்ய காரணமாக இருந்துள்ளார்.

1.3 திரு. குழந்தைவேல் உண்மையை மறைத்து உத்திரவு பெற்றதை திரு சண்முகசுந்தரம் முன்னால் காவல் துறை அதிகாரி நில அபகரிப்பு தடுப்பு பிரிவு அவர்களை சாட்சியாக சமர்பித்துள்ளதாகவும், திரு. விவேகானந்தன் முன்னால் காவல் துறை அதிகாரி, கவுந்தப்பாடியை தனது வழக்கு CSR NO: 168/13 CSR NO: 163/14 வழக்கின் கோப்புகள் 28/04/12 மற்றும் 06/05/12–ல் நடைபெற்ற விசாரணையை திரு. குழந்தைவேல் மறைத்ததை நிரூபிக்க சாட்சியாக சமர்பித்துள்ளதாகவும், நீதிமன்றத்தில் நீதி தவறுதலாக எடுத்து செல்லப்பட்டதை நிரூபிக்க நிர்வாக அலுவலர், மாவட்ட முதன்மை நீதிபதி. கடலூர் மற்றும் ஈரோடு அவர்களை சாட்சியாக சமர்பித்துள்ளதாகவும், தினத்தந்தி, ஈரோடு நாளிதழ் வெளியீட்டாளர் அவர்களை வழக்கின் உள்நோக்கம் தெரிவிக்க சாட்சியாக சமர்பித்துள்ளதாகவும், துறை விதிமுறைகள் குறித்து குறியீடு செய்ய துறைத்தலைவர் அவர்களை சாட்சியாக சமர்பித்துள்ளதாகவும், தான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க 315 Cr.PCன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளதாகவும், தான் இந்த வழக்கில் ALTER THE CHARGE Cr.PCன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி காரணங்களினால் தனது தரப்பு சாட்சிகளை ஆஜர் படுத்த உத்தரவு பிறப்பிக்குமாறு மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிர்மனுதாரர்/புகார்தாரர் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையில் இந்த மனுவானது வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்பதற்காகவும், இந்த வழக்கிற்கும் மனுவில் கூறியுள்ள நபர்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், மனுதாரர் இதுபோன்று பல மனுக்கள் எவ்வித முகாந்திரம் இன்றி தாக்கல் செய்ததாகவும், மனுவை தள்ளுபடி செய்யுமாறும் எதிருரை தாக்கல் செய்துள்ளார்.



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2025.10.29 15:22:47 +0530

3. **<u>தீர்வு</u>**

எதிரிதரப்பில் கனரா வங்கி மேலாளர், பவானி கிளை, மூத்த மேலாளர், கனரா வங்கி, ஈரோடு மற்றும் ஆனந்தமூர்த்தியை விசாரிக்க வேண்டுமென மனு தாக்கல் செய்துள்ளார்.

4. பிரிவு 254(2) ஆனது The Magistrate May, if he thinks fit, on the application of prosecution or the accused, issue a summon to any witness directing him to attend or to produce any document or other thing.

மேற்படி பிரிவின்படி, எதிரி தரப்பில் மனுவினை பரிசீலனை செய்ததில் மேற்படி சாட்சிகளை எதற்காக, விசாரிக்க உள்ளோம் என்று எதிரி தரப்பில் அளிக்கப்பட்ட மனுவில், காவல் துறை தனது புகார் மனு CMPNO:9869/13 வழக்கில் குற்றவாளிகளை தப்புவித்துள்ளார்கள். புருசோத்தம்மன் கொடுத்த உண்மை வாக்குமூலத்தை 25/11/13ல் CSRNO:147/13ல் மறைத்துள்ளதாகவும், மேலும், திரு. குமரேசன் வழக்கறிஞர் சட்டக்கருத்துரை வழங்கியதாக வழக்கை முடித்துள்ளனர் என்றும், திரு. குமரேசன் முன்னால் அரசு வழக்கறிஞர் பவானி காவல் துறைக்கு சட்டக்கருத்துரை வழங்கவில்லை என்றும் கவுந்தப்பாடி காவல் நிலையத்திற்கு சட்டக்கருத்துரை வழங்கியதாக பார் கவுன்சிலுக்கு தனது புகார் மனு எண்: 150/24ல் தெரிவித்துள்ளார்

5. மேலும், காவல்துறை CMP NO:10510/13ல் விசாரணை செய்யாமல் குற்றவாளிகளை தப்புவிக்க அறிக்கை சமர்ப்பித்துள்ளனர் என்றும், OS NO:147/13, IA NO:557/13, IA NO:1452/13, IA NO:1453/13 வழக்கில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பவானி திரு. குழந்தைவேல் உண்மையை மறைத்து பொய்யை சொல்லி போலி ஆவணங்கள் 2013ல் தயார் செய்து நீதிமன்றத்தை திசை திருப்பி உத்திரவு 04/12/13 மற்றும் 30/04/14 இல் பெற்றுள்ளார் என்றும், திரு. குழந்தைவேல் 340 Cr.PC மற்றும் இதர பிரிவுகளின் கீழ் தண்டிக்கப்படவேண்டியவர் என்றும், சென்னை உயர்நீதிமன்றத்தில் CRLOP NO:6002/2015 வழக்கில் நீதிமன்றம் 12/03/2015ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட போதிலும் திரு.விஜயகுமார் பதில் அறிக்கை தாக்கல் செய்யாமல் இருந்துள்ளதாகவும், மேலும் உண்மையான வாக்குமூலத்தை மறைக்க உடந்தையாக இருந்துள்ளதாகவும், சென்னை



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.10.29 15:22:52 +0530

உயர்நீதிமன்றத்தில் திரு. சத்தீஸ் காவல் துறை ஆய்வாளர், ஊழல் தடுப்புத்துறை, கடலூர் அவர்கள் CRLOP NO:6002/2015 வழக்கில் எதிர்வாதம் எந்தவித ஆவணங்கள் இல்லாமல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

6. தனது புகார் மனு 23/12/21 உடன் இருபத்தியொரு ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்ட பிறகு 07/03/22 தேதியில் சட்டக்கருத்துரை பெற நூற்றி ஐந்து பக்கங்கள் சமரப்பிக்கப்பட்டு இருபது பக்கங்கள் கொண்ட மனு மற்றும் ஆவணங்கள் 21/03/22 அன்று மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், ஈரோடு அவர்களிடம் சமர்பிக்கப்பட்டும், திரு. இரகுநாதன், முன்னால் காவல் துறை உதவி ஆய்வாளர், பவானி குற்றவாளிகள் தப்புவிக்க காரணமாக இருந்துள்ளார் என்றும், திரு ஈஸ்வரன் குற்றவியல் நீதிமன்றம் எண்.1 பவானி முன்னால் ஊழியர் குற்றவாளிகள் தப்புவிக்க காரணமாகவும் தன் மீது பொய் வழக்கு தாக்கல் செய்ய காரணமாகவும் நீதிமன்றம் BAIL வழங்கியும் நான்கு நாட்கள் நீதிமன்ற Custodyல் வைக்க காரணமாக இருந்துள்ளதாகவும், திருமதி விஜயலட்சுமி, சார்பு நீதிமன்ற நீதிபதி அவர்கள் உத்தரவு பிறப்பித்தபடி நீதிமன்ற கோப்புகள் சரி செய்துள்ளார் என்றும், மேலும் நீதிமன்ற உத்தரவு படி CMPNO:9869/13, CMP No:10510/13 மற்றும் CMP NO:5476/22 வழக்கில் விரைவான நடவடிக்கை எடுக்காமல் இருந்துள்ளதாகவும், திருமதி. ஸ்ரீப்ரியா வழக்கறிஞர் தனது வக்காலத்து WPNO:33144/15 மற்றும் CRLOP.NO 6002/2015 வழக்கில் வழக்கு தாக்கல் செய்யாமல் வழக்கு தள்ளுபடி செய்ய காரணமாக இருந்துள்ளார்.

7. திரு. குழந்தைவேல் உண்மையை மறைத்து உத்திரவு பெற்றதை திரு சண்முகசுந்தரம் முன்னால் காவல் துறை அதிகாரி நில அபகரிப்பு தடுப்பு பிரிவு அவர்களை சாட்சியாக சமர்பித்துள்ளதாகவும், திரு. விவேகானந்தன் முன்னால் காவல் துறை அதிகாரி, கவுந்தப்பாடியை தனது வழக்கு CSR NO: 168/13 CSR NO: 163/14 வழக்கின் கோப்புகள் 28/04/12 மற்றும் 06/05/12–ல் நடைபெற்ற விசாரணையை திரு. குழந்தைவேல் மறைத்ததை நிரூபிக்க சாட்சியாக சமர்பித்துள்ளதாகவும், நீதிமன்றத்தில் நீதி தவறுதலாக எடுத்து செல்லப்பட்டதை நிரூபிக்க நிர்வாக அலுவலர், மாவட்ட முதன்மை நீதிபதி. கடலூர் மற்றும் ஈரோடு அவர்களை சாட்சியாக சமர்பித்துள்ளதாகவும், தினத்தந்தி, ஈரோடு நாளிதழ் வெளியீட்டாளர் அவர்களை வழக்கின் உள்நோக்கம் தெரிவிக்க சாட்சியாக



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2025.10.29 15:22:57 +0530

சமர்பித்துள்ளதாகவும், துறை விதிமுறைகள் குறித்து குறியீடு செய்ய துறைத்தலைவர் அவர்களை சாட்சியாக சமர்பித்துள்ளதாகவும், தான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க 315 Cr.PCன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி காரணங்களினால் தனது தரப்பு சாட்சிகளை ஆஜர் படுத்த உத்தரவு பிறப்பிக்குமாறு இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

8. மேற்படி சாட்சிகளை தனது தரப்பு சாட்சியங்களாக விசாரிக்க கூறிய காரணங்கள் அனைத்தும் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்கிற எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளார் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், அவர்களை விசாரிக்க வேண்டும் என காரணமும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், மனுதாரர் இந்த வழக்கில் நீதிபதிகள், வழக்கறிஞர், அரசு ஊழியர்கள் மீதுள்ள குறைகளை கூறி மனு தாக்கல் செய்துள்ளார். இருப்பினும், எதிரி தரப்பில் பல வாதங்கள் எடுக்கப்பட்டாலும் அவர் தனது வாதத்தை நிரூபிக்க கவுந்தப்பாடி காவல் ஆய்வாளருக்கும் மற்றும் நில அபகரிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் பொருத்த மட்டும் இந்த மனுவானது அனுமதிக்கப்படுகிறது. மற்ற சாட்சிகள் எல்லாம் இந்த வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என தாக்கல் செய்துள்ளதால், அதை பொறுத்து இந்த மனுவானது தள்ளுபடி செய்யப்படுகிறது.

எனவே மேற்கண்ட பரிசிலனைகளின் இந்த மனுவினை இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

மேற்படி உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தப்பட்டு, இன்று 2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.10.29 15:23:04 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**பவானி.**